சாதனங்கள் இல்லாததால், கல்லல் ஊராட்சி மன்றத் தலைவரை இதுபற்றி அறிக்கை கோரப்பட்டது. அறிக்கை உடன் கிடைக்கப் பெறாததால் இதுபற்றி கல்லல் காவல் நிலையத்திற்குப் புலனாய்வு செய்ய புகார் கொடுக்கப்பட்டது. ஆனால், இதற்கிடையில் அதை நரியங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் தவசியேந்தல்பட்டி அரிசனங் கள் விவசாயத்துக்குத் தங்கள் செலவில் மராமத்து செய்து மாத வாடகை ரூ. 30க்கு 15—6—1977-ல் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதற்குப்பிறகு, இந்த பம்பு செட்டு இருக்கும் விவரம் தெரிந்த காரணத்தால், போலீஸ் மூலம் எடுக் கும் நடவடிக்கையை வாபஸ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. ஆனால், இந்தக் குறைபாடு ஊராட்சித் தலைவர் அவர்கள் மேல் இருக்கின்ற காரணத்தால், அவர் மேல் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஒரு பஞ் சாயத்தைச் சேர்ந்த பம்பு செட்டை எந்தவிதமான அதிகாரமும் இன்றி, வாடகைக்கு கொடுப்பதற்கோ, விற்பதற்கோ அதிகாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது தவறு என்ற காரணத்தால்தான் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நாங்குநேரி வட்டத்தில் அணைக்கட்டுத் திட்டங்கள்.

*653 வினா— திரு. மு. ஜான் வின்சென்ட் திரு. மு. ஆறுமுகம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், கொடு முடி அணைத்திட்ட வேலைகள் தற்சமயம் நடைபெறாதது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால், அதற்கான காரணம் என்ன ?

(இ) இத் திட்டப்பணிகளை முடிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இத் திட்டம் மறுபரிசீலனையில் உள்ளது

1978 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கும் பதில் சொல்லிவிட்டால் நல்லது.

* 654.விஞ— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நாங்குநேரி வட்டத்திலுள்ள கொடுமுடியாறு மற்றும் பச்சையாறு திட்டங்கள் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) அவைகளை உடனடியாக நிறைவேற்ற எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ; இத் திட்டங்கள் மறு பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 655.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறேனே, அது தங்கள் கண்ணில் படவில்லையா ? நான் கேள்வி கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகரைக் கேள்வி கேட்கக்கூடிய நிலை இந்த அவையிலே இருக்கக் கூடாது. என் கண்ணில் படவில்லை. பேச வேண்டுமென்ருல் பேசலாம். திரு. அழகர்சாமி.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நான் தங்களை கேள்வி கேட்கவில்லை. நான் கையைத் தூக்கியது தங்கள் கண்ணில் படவில்லையா என்றுதான் கேட்டேன்.

தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முக்கியமானத் திட்டம். நாங்குநேரி வட்டத்தில் ஏறக்குறைய நூற்றுக் கணக்கான ஏக்கருக்கு பாசனத்திட்டமாகும். இந்தத் திட்டம் ஒரு பெரிய மனிதரின் தலையீட்டால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதஞல் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அங்கே ஊர்வலம், உண்ணுவிரதம், போராட்டம், மறியல் எல்லாம் செய்தார்கள். அதற்கு 30, 40 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு தனி நபருடைய தடங்கல் காரணமாக இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, பல்லாயிரக்கணக்கான நிலம் லாபமடையக்கூடிய இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்கு 166 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டு உத்தரவிடப்பட்டது. ஆஞல், மீண்டும் ஆய்வு